TAMIL NADU LEGISLATURE LIBRARY
31 JUL 1973
MADRAS

### 3. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) சட்ட அமைச்சர் தம் காரில் தேசீயக் கொடியை பறக்க விட்டுச்செல்லாமை குறித்து.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஸார், ஆன் எ பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். அமைச்சர்களைக் கௌரவிக்கும் முறையில் அவர்கள் தங்கள் காரில் பயணம் செய்யும்போது தேசீயக் கொடிகளைப் பறக்கவிட்டுச் செல்லவேண்டும் என்ற ஒரு முறையிருக்கின்றது. அது நெடுஞ் சாலைகளில் அமைச்சர்களுடைய கார்களை அடையாளம் கண்டு கொண்டு அவர்களுக்கு ட்ராஃபிக்கில் முன்னுரிமை கொடுக்கவும் உதவியாக இருக்கின்றது. ஒரு ஆண்டு காலத்திற்கு முன்பு இங்குள்ள அமைச்சர்களுக்குத் தனிக்கொடி வேண்டும் என்று கேட்டு, அது மத்திய அமைச்சரவையால் மறுக்கப்பட்டுவிட்டது. அதன்பின்னர் நமது மாண்புமிகு முதலமைச்சர் உள்பட அனைவரும் தேசியக் கொடியினை கார்களில் பறக்கவிட்டுச் செல்ல கின்றனர். ஆனால் ஒரு சில அமைச்சர்கள் குறிப்பாக மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் அந்தக் கொடியின்றி சட்ட மன்றத்திற்கு வரும்போது ஒரு பரபரப்பை உண்டுபண்ணுவதாக அமைகிறது. எனவே, ஒருகால், தனிக்கொடி கேட்டு மறுக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் இதைப் பறக்கவிட்டுக் கொள்ளுவதில்லையோ என்று எண்ண இடமேற்படுகிறது. எனவே, அமைச்சர்கள் அனைவரும் தேசியக்கொடியினை கார்களில் பறக்கவிட்டுச் செல்ல வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை அரசு ஏற்று நடத்துமா என்று அறியவிரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி :** ஸார், ஆன் எ பாய்ண்ட் ஆஃப் ஆர்டர். இரண்டு மூன்று தினங்களாக சென்னையில் தேசியக் கொடி போன்று உள்ள ஒரு கொடியை ஒரு சிலர் தங்கள் கார்களில் போட்டுக்கொண்டு கார்களை ஓட்டிக்கொண்டு வருகின்றார்கள். பிறகுதான் அது இந்திரா காங்கிரஸ் கொடி என்று தெரிந்தது. இப்படிக் கொடியை உபயோகப்படுத்தி வரும்போது அது அமைச் சருடைய காரா அல்லது கட்சிக்காரருடைய காரா என்று தெரியா மல் இருக்கின்றது. இந்த வேறுபாட்டினைப் போக்குவதற்கு அந்தக் கட்சிக்காரர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஸார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்பது சட்ட மன்ற விதியைப் பற்றித்தான் இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். ஆனால் இங்கே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி என்னைப் பற்றிச் சொன்னார்கள். தேசியக் கொடியைப் பொறுத்தவரையில் எல்லா அமைச்சர்களும் எப்போதும் கட்டாயமாகப் போட்டுக்கொள்ள வேண்டும் என்று விதி இல்லை. என்னைப் பொறுத்தவரையில் தேசியக் கொடியைப் போட்டுக்கொண்டு பரபரப்பை ஏற்படுத்தாமல் இருந்தால் பரவாயில்லை என்றே கருதுகிறேன்.

### (ஆ) நிதி ஒதுக்கீடு மசோதா நிறைவேறும் கட்டத்தில் முதலமைச்சர் கடைசி நிமிடத்தில் சில அறிவிப்புகள் செய்தது குறித்து

THIRU R. PONNAPPA NADAR : Sir I would like to raise another point of order. Yesterday, the Hon. Chief Minister while the Appropriation Bill was being passed was making certain announcements at the last moment. I welcome the announcements. But, our rules are clear with regard to Appropriation Bills. I would refer to Rule 158 of our Assembly Rules.

Rule 158 says :

" (1) Subject to the provisions of the Constitution, the procedure in regard to an Appropriation Bill shall be the same as for Bills generally, with such modifications as the Speaker may consider necessary.

(2) The debate on an Appropriation Bill shall be restricted to matters of public importance or administrative policy implied in the grants covered by the Bill which have not already been raised while the relevant demands for grants were under consideration "

So, the Rules are clear that the matters which are covered by the Bill and which have been the subject-matter of various Demands will form the reply that is sought to be made by the Hon. Chief Minister. I would also refer to Article 204 of the Constitution which reads like this :

" (1) As soon as may be after the grants under Article 203 have been made by the Assembly, there shall be introduced a Bill